விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G.P.O.as a Newspaper in Ceylou

**அறிவிப்பு**

காந்தீய - சர்வோதய இலட்சியங்களுக்கமைய கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்ய தற்கு ஊழியர்கள் தேவை விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

மலர் 9 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 102) 1972 பெப்ரவரி-மார்ச்சு | இதழ் 5-6

# இன்றைய அரசியல் தோற்றுவிட்டது!

நாட்டில் இன்றுள்ள அரசியலில் எனக்கு எத்தகைய நம்பிக்கையுமில்லை. இதனால் நான் நம்பிக்கை இழந்தவன் என்பதல்ல. நான் அரசியலிலிருந்து விலகி பதினாறு வருடங்களாகின்றன. விலகியபொழுது நான் வயோதிகம் எய்தவில்லை. அரசியலில் நம்பிக்கை இல்லாமலிருப்பதற்குக் காரணம் அரசியலால் ஆவது ஒன்றுமில்லை என்பதும், பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கானது போல்தான் இருக்குமேயல்லாது, பிள்ளையார் ஆகாதும் என்பதும்தான். நாம் நினைக்கின்ற பிள்ளையாரை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.ஆனால் அதை அரசியல்வாதிகளால்உருவாக்க இயலாது. இந்நாட்டு மக்கள்,இளைஞர் உருவாக்குவார்கள். இந்த நம்பிக்கை எனக்கு நாள்தோறும் ஏற்படுகிறது. இல்லையெனில் இந்த அறுபத்தெட்டு வயதில் இப்போர்க்களத்தில் நின்றிருக்க மாட்டேன். எங்காவது ஓடி அமைதியை நாடி அமர்ந்திருப்பேன்.

இன்றைய அரசியலில் நம்பிக்கை வைத்திருப்பவ்ர்கள் உலர்ந்த எலும்பையே உறுஞ்சுகிறார்கள் என்று கூற வேண்டும். அதை உறுஞ்சும் போது தனது நாக்கின் ரத்தத்தைத்தான் ரசிக்கிறார்களேயன்றி வேறுரத்தத்தை அல்ல. இந்த அரசியல் வீழ்ச்சி அடைந்துகொண்டிருக்கிறது; மேலும் வீழ்ச்சி அடையும். தகர்ந்து கொண்டிருக்கிறது;மேலும் தகரும். உடைந்து சுக்கு நூறாகும். அப்பொழுது ----. புதிய அஸ்திவாரத்தின் மீது புதிய அரசியல் உருவாகும். அது இதனிலும் முற்றிலும் வேறாக இருக்கும்.

அதன்பெயர் அரசியல் என்றிருக்காது. மக்களியல் என்றிருக்கும். அது மேலேயிருந்து அதிகாரம்செலுத்தாது. தலைநகரிலிருந்து அரசோச்சாமல், கிராமங்களிலிருந்தும் ஒவ்வொரு தெருவிலிருந்தும் அரசோச்சும். இதற்கு புதிய அரசியல் என்று பெயர் எழுதிய ஒரு விளம்பர பலகையை தொங்கவிட்டால் மட்டும் போதாது. அல்லது அரசியல் அரங்கத்தில் புதிதாக தலைவர் ஒருவர் தோன்றினால் மட்டும் போதாது. அதுமக்களின் அடிப்படை ஆற்றலிலிருந்து தோன்றவேண்டும். இந்தமக்களியலுக்கான விதை பாரத மண்ணீல் கடும்தவத்திலர்ழ்ந்துள்ளது. இந்த விதையை அண்ணல் காந்தியடிகள் உண்டாக்கினார்; பாரத மண்ணை பலமுறை பாதயாத்திரை செய்ததின் மூலம் தவமுனி வினோபா அவர்கள் பன்முறை உழுது பக்குவப்படுத்திஅவ் விதையை விதைத்துள்ளார். ஆயிரக் கணக்கான ஊழியர்கள் தங்களது உழைப்பால் அதற்கு உரமிட்டுதண்ணீர் பாய்ச்சுகிறார்கள்.

இந்நாட்டு ஆன்மிக வரலாற்றை எடுத்துக்கொண்டால் அது இளைஞர்களுடையதாக இருக்கிறதேயல்லாமல் வயோதிகர்களுடையதாக இருக்கவில்லை. கிருஷ்ணன் வாழ்வென்னும், குரு க்ஷேத்திரத்தில் ஆன்மிகம் என்ற சங்கநாதத்தை முழக்கியபோது அவர் வயோதிகரல்லர்.வாலிபராகவே இருந்தார். அவர் பாரதத்தின் துடிப்பு மிக்க இளமைத்தேருக்கு தேரோட்டியாக இருந்தார். தனது இளம்மனைவியின் அரவணைப்பில் தூங்கிக் கொண்டிருந்த பச்சிளங்குழந்தை ராகுலை விட்டு விட்டு தனது ஒப்பற்ற பண்பாட்டுப்புரட்சி வழியில் முன்னேறினார் சித்தார்த்தர். அவர் அப்பொழுது கிழவரல்லர். கட்டிளங்காளையேயாவர். அத்வைதத்தை ஆதிசங்கரர் தனது வெற்றியாத்திரையை தொடங்கியபோது வயோதிகத்தை எட்டவில்லை. வாலிபராகவே இருந்தார். சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நகரின் உலகசமயங்களில் மேடையிலேறி வேதாந்த வீரமுழக்கம் செய்தபோது அவர் வாலிபராக இருந்தாரேயன்றி வயோதிகராக இல்லை. தென்னாபிரிக்காவின் நிறவெறி என்ற காட்டுத்தீயில் குதித்து அண்ணல் காந்தி அடிகள் ஆன்மிக ஆராய்ச்சி செய்தபோது அவர் வாலிபரே.

(3 ஆம்பக்கம் பார்க்கவும்)

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி
காந்தி ஆண்டு 102
1972 பெப்ரவரி - மார்ச்சு

## சர்வோதயம்

சர்வோதயத்திற்கு ஒருஅரசியல் தத்துவம் இருக்கிறதா? எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற ஓர் எண்ணத்தினுல்எழுந்தத்து வத்திற்கு ஏலவே அமைந்த ஓர் அரசியற் கொள்கை இருக்கமுடியாது தானே. மக்களுக்குத், தொண்டு செய்யும் பணியில் ஈடுபட ஈடுபட அப்பொழுது பிரச்சினைகள் தோன்றும்.பிரச்சினைகளைஎவ்வாறு இலட்சியத்திற்குப் பங்கமில்லாமல் தீர்க்கலாம் என்று பின்னர் ஆராய்ச்சி தோன்றும். இவ்வாருக இலட்சியம், செய்கைப்பணி, பிரச்சினை, தத்துவம் என்று சிந்தனை தோன்றி வளரும்.

சர்வோதயத்தைப் பற்றி அண்மையில் ஓர் ஆராய்ச்சி நடந்து ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது. இதில் சர்வோதயத்திற்கும் மேலை நாட்டில் 'அரசு அற்றநிலை'' என்னும் ஓர்அரசியற் கோட்பட்டிற்கும் உள்ளஒற்றுமை காட்டப்பட்டுள்ளது. இது பற்றிக் கருத்துவேறு பாடுகள் இருக்கலாம். ஆனுல் இந்த ஆராய்ச்சியின் ஒரு முடிபை சர்வோதயத்தோழர்கள் எல்லோரும் ஒத்துக் கொள்வர். அது அஹிம்சை பற்றியது. சமூக மாற்றங்கள் யாவும் அஹிம்சை முறையில் நடைபெறவேண்டுமென்பதைஎல்லாச் சர்வோதயவாதிகளும் ஒத்துக்கொள்வர். உழைப்பாளிகள் உழைத்துக் கொண்டிருக்க,உழையாதவர் அனுபவித்து மகிழ்வது என்பது சர்வோதயத்திலில்லை. பணிசெய்வது சர்வோதயவாதிக்கு ஒரு நிர்ப்பந்தமாகத்தோன்றக் கூடாது.உண்டி, உறையுள்,உடை எவ்வாறு மனிதனுக்கு முக்கியமோ அவ்வாறு உழைப்பும் அத்தியாவசியம் என்பது சர்வோதயம். எனவே இயன்ருர் உழைக்க ஆற்றலிருந்தும் உழையாதார் என்போர் இருந்து அனுபவிக்கும் நிலை சர்வோதயத்தில் கிடையாது,

சர்வோதயத்தின் உடலுழைப்பும் தன்னலம்கருதியஉழைப்பாயிருக்காது' பிறர் நலம் நோக்கியதாய் இருக்கும் வேளையில் அதுதன்னையும் ஈடேற்றும் கொள்கைஉடையதாயிருக்கும். அது போலவே சர்வோதய சமுதாயத்தில் 'அரசு' என்பது ஒன்று இல்லாமல் இருக்குமென்று கருதக் கூடாது. சர்வோதய சமுதாயத்தில் நிலவும்நிலைமைஎப்படி இருக்கும்?அங்கே அரசுஎன்பதற்கும்சமுதாயம் என்பதற்கும் வித்தியாச மோவேறுபாடோ இருக்காது.

இந்த வேறுபாடற்ற நிலைமை எப்படி உண்டாகும்? மக்கள் ஒருமைப் பட்டுப் பொது நலம் கருதி உழைப்பதனுல் தான் இது ஆகும்.

சர்வோதயத்தில் எப்பொருளிற்கும் பிறர் எவரையும் நாடாது உழைக்கும் பண்பே தலை எடுத்து நிற்கும். எவ்வாறு தனி ஒருவன் பிறனிடமிருந்து இரந்து உண்ணுது வாழவிரும்புவானே அப்படியே சர்வோதய சமுதாயம் பிறநாட்டிடமிருந்து,இரந்தோ கடன் பட்டோ வாழவிரும்பாது. அச்சமுதாயம் கடன் படுவதிலும்பார்க்கப் பட்டினி கிடக்க முன் வரும். எனவே சர்வோதயத்தில் மெய் வருந்தும் உழைப்பும் புத்தி உழைப்பும் ஒரு தரத்தவை எனக்கருதப் படும். அங்கு தொழிலாளி முதலாளி வித்தியாசம் கிடையாது. ஏனெனில் உடலுழைப்புத்தான் உண்மையான முதலாக அமையும்.

இன்னும் சர்வோதயத்தில் மக்கட்பற்று சமுதாய,உணர்வு சாசுவதமாக நிலவவும் உண்மையான கட்டுக்கோப்பாக வளரவு வேண்டுமெனில் சமுதாயம் கிராம அளவில்ஒன்றுபட்டு எந்தவிதஏற்றத்தாழ்வுமின்றிஉழைக்க வேண்டும். கிராம அளவில் மக்களைச் சமுதாய உணர்ச்சி பெற்றவர் ஆக்குகின்ற பொழுது மக்களிடை இப்பொழுது நிலவும்சகலபிரிவினைகளும் மறைந்துபோய்விடும். பெருத்த பகைமைகள் அங்கு தோன்ற வாய்ப்பிருக்காது.

உடலுழைப்பு,சொத்துப் பற்றின்மை சமுதாயநலம், இவை மூன்றையும் முன்வைத்துப் பணியாற்றினுல், வரலாற்றில் வன்மை,பகைமை இரண்டும் தோன்ரு. வன்முறையான புரட்சி என்பதே ஒன்று உலகிலிருந்துமறைந்துவிடும்.

இ.இ

## சம்பத்துத் தானம்

இரத்மலானை சர்வோதய நிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவர்கள்

| | ரூ | ச |
|---|---|---|
| திருமதி.ம. குமாரசாமி<br>12, மல்வத்தைஅவென்யூ,<br>நுகேகொட | 10 | 00 |
| செல்வன்.சஞ்சீவன்-சிவலிங்கம்<br>7,விவேகானந்தஅவென்யூ<br>வெள்ளவத்தை | 5 | 00 |
| திருமதி. பேணடேற்யோசப்<br>திருக்குடும்பகன்னியர்மடம்<br>பம்பலப்பிட்டி | 6 | 00 |
| செல்வி. லோகினி-செல்லத்துரை<br>திருக்குடும்பகன்னியர்மடம்<br>பம்பலப்பிட்டி | 10 | 00 |
| திருமதி. சி. பரமேஸ்வரி<br>நீர்கொழும்பு | 5 | 00 |

இன்றைய அரசியல்.........

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

நான் குறிப்பிட்ட பண்பாட்டுப் புரட்சிக்கு இளைஞர்களே போர்வீரர்களாகவும் சேனைத்தலைவர்களாகவும் இருக்கமுடியும். இந்நாட்டுக்கலைஞர்களும் கவிஞர்களும் அப்புரட்சியை உற்றுநோக்கி, அதற்குரிய மந்திரத்தையும், கவிதைகளையும் இயற்றுபவர்களாக ஆகவேண்டும்என நான் விரும்புகிறேன். கவிதைகளைப்பாடி, ஆனந்தக் கூத்தாடி கருத்திற்கு உருக்கொடுப்பார்களாக!

மேலே குறிப்பிட்ட புரட்சியின்றி பாரதத்தையும் பாரதப்பண்பாட்டையும் காப்பாற்றஇயலாது. அப்புரட்சி மனிதத்தன்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் உள்ளப்புரட்சியாக இருக்கும். பாரதத்தின் ஆன்மிகம் ஒவ்வொரு மனிதரின் வாழ்கையில் இடம்பெறும் முறையில் புரட்சி ஏற்படும். அப்போது தனிமனிதன் சமுதாயத்தின் நன்மையிலேயே தனது நன்மை இருப்பதைக்காண்பான். அவ்வாறே வாழ்க்கை நடத்தவும் ஆரம்பிப்பான். அப்புரட்சியின்றி சோஷலிஸமோ, கம்யூனிஸமோ வராது. சர்வோதயமே அப்புரட்சியின் மறுபெயராகும்.

தனிமனிதன் சமுதாயத்திற்காகவும், சமுதாயம் தனிமதருக்காகவும் வாழட்டும் என்பது ஒரு நாளில் நிகழ்ந்துவிடாது. அழிவுநாசம் ஒரு நாளில் ஏற்படுவிடும். ஆக்கப்பணி புதியபடைப்பு ஒரு நாளில் ஏற்பட்டுவிடாது. எனவே நமது பண்பாட்டுப் புரட்சிமலையேற்றத்தைப்போன்ற ஒரு முறையாகும். இந்தக் கடினமான ஏற்றத்தில் இளைஞர்களே முன்னணியில் இருப்பார்கள். அவர்களின் உதவி கொண்டு வயோதிகர்களும் ஏறமுடியும். புரட்சியை நோக்கி ஏறுகின்ற இந்த வேளையில் கவிஞர்கள் தங்களது சங்கநாதத்தை முழக்கி வெற்றிப் பாட்டு பாடுவார்களாக.

— ஸ்ரீ ஜெயபிரகாஷ்நாராயண்

# திரு. ஆ. ம. செல்லத்துரை அவர்களின் சர்வோதயத் தொண்டு

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையை உருவாக்கி பல ஆண்டுகளாக அதன் செயலாளராக இருந்துஆலயப்பிரவேசம், தீண்டாமை ஒழிப்பு போன்ற மிகப்பெரிய புரட்சிகரமான சேவைகளை கொந்தளிப்பு இல்லாமல் அமைதியான- சாத்வீக முறையில் நடத்தி வெற்றிகண்டவரும், சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகளின் பல்கலைக் கழகக்கல்விக்காக அரும்பாடுபட்டு உழைத்துப்பல பட்டதாரிகளை உருவாக்கியவரும், மக்கள் முன்னேற்ற மன்றம், வடமராட்சி சமூக சேவா சங்கம் ஆகிய சங்கங்களின் தலைவராக இருந்து சேவை செய்து வருபவரும் முன்னாள்தேவரையாளிஇந்துக்கல்லூரி தமிழ் விரிவுரையாளராக இருந்து ஓய்வு பெற்றவரும் அகில இலங்கைக் காந்திசேவாசங்கத்தின் உபதலைவரும் ஆன திரு. ஆ. ம. செல்லத்துரை அவர்கள் தமது எதிர்காலத்தை காந்திய சர்வோதய பணிகளுக்கு அர்ப்பணிக்க முன்வந்துள்ளார்.

இவர் சென்றமாதம் தொடக்கம் கிளிநொச்சி- உருத்திரபுரத்திலுள்ள ''காந்திநிலையம்'' மாணவர் இல்லநிர்வாகத்திற்குஉதவி புரிந்துவருவதோடு இங்கு திருமுறை வகுப்பையும் திருக்குறள்வகுப்பையும் ஆரம்பித்துள்ளார். இப்பணிகளுடன் உருத்திரபுரத்திலுள்ள அகில இலங்கைக்காந்திசேவா சங்கத்தின் தலைமை அலுவலக நிர்வாகங்களையும் கண்காணித்து வருகிறார்.

தாழ்த்தப்பட்ட- பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்துக்காக காந்தி சேவாசங்கம் மூலம் நிர்மாண- ஆக்க வேலைகளை செயல்படுத்த திரு. ஆ. ம. செல்லத்துரை திட்டமிட்டுள்ளார்என்பதும் குறிப்பிடத்தக்கது.

---

**இளைஞர்களே!**

**உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன் ?**

- ★ கமம்
- ★ நெசவு
- ★ தும்பு
- ★ அச்சு
- ★ தையல்
- ★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு

காந்திநிலையம் : உருத்திரபுரம்

அல்லது

சர்வோதயநிகேதனம்

212, 10 ஆவது குறுக்குத் தெரு

இந்துக்கல்லூரிச்சதுக்கம்

இரத்மலானை.

---

## மணிவாக்கு

சிந்தையைத்தூய்மைசெய்க. மாசுபடிந்த பயனற்றசிந்தனையைஅகற்றுக

இரவும்பகலும் சுத்தமான காற்றையே உட்கொள்க.

நிமிர்ந்து நிற்க, நிமிர்ந்துஉட்காரு செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் சுத்தமாகவும் துப்புரவாகவும் இருக்க. இச் செயல்கள் யாவும் உள்ளத்தின் சீலத்துக்கு உரிய வெளிப்பாடாக அமைய வேண்டும்.

மக்களுக்குச் சேவை செய்வதற்கான வாழ்க்கைக்காகவே உணவு கொள்க. உடலும் உள்ளமும் செம்மையாக இருப்பதற்கு வேண்டிய அளவு மட்டும் உணவுஉட்கொண்டால்போதுமானது.

— காந்தியடிகள்

# சர்வோதய பாத்திர இயக்கம்

அகில இலங்கைக் காந்திசேவா சங்க ஆதரவில் இயங்கி வரும் சர்வோதய பாத்திர இயக்கச்செய்திகள்.

- பம்பலப்பிட்டி, இந்துக்கல்லூரியிலிருந்து 36 கொத்து அரிசியும்
- கொழும்புபண்டாரநாயக்க மாவத்த கணபதி வித்தியாலயத்திலிருந்து 9 கொத்துஅரிசியும்,
- தெகிவளை தமிழ்ப்பாடசாலையிலிருந்து 11 கொத்து அரிசியும், கொழும்புப்பகுதிகளிலுள்ள இல்லங்களிலிருந்து 78 கொத்து அரிசியும்,
- கிளிநொச்சி- உருத்திரபுரம் இல்லங்களிலிருந்து 1972 சனவரி, பெப்ரவரி மாச்சு மாதங்களில் மொத்தம் 101 கொத்து அரிசியும் கிடைத்துள்ளன

# ஆட்சியற்ற சமுதாயம்

கடவுளே, எங்களுக்கு ஒரு அரசனை அனுப்புங்கள் எனத்தவளைகள் ஆண்டவனை ஒரு சமயம் வேண்டிக்கொண்டன. கடவுளும் அவைகளின் பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டார். அரசனாக ஒரு காளை மாட்டை அவர் அனுப்பி வைத்தார். அதன் காலில் அகப்பட்டு 40-50 தவளைகள் இறந்து போயின.

''எங்களுக்கு இதுபோன்ற அரசன் வேண்டாம். வேறு அரசனை அனுப்புங்கள்.' என்று தவளைகள் மீண்டும் பிரார்த்தனை செய்தன. கடவுள்மேலே இருந்துஒருபாறையைக்கீழேஎறிந்தார். அதனடியில் சிக்கிநசுங்கி 400, 500 தவளைகள் மடிந்தன. தவளைகளுக்கு மிகுந்தபயம் ஏற்பட்டுவிட்டது.''இது என்ன ஆபத்து என அவை மீண்டும் சொல்ல ஆரம்பித்தன.

கடவுள் சிரித்துக்கொண்டே இதற்குப்பதில் சொன்னர். ''நான் அனுப்பிய காளைமாடு எனது வாகனம் உங்களுக்குப்பயன் படவில்லை. பின்னர் நான் எப்போதும் அமர்ந்திருக்கும் படிகப்பாறையை அனுப்பினேன். அதுவும் உங்களுக்குப் பிடிக்கவில்லை ஆகையால் அரசன் இல்லாமலேயே உங்கள் வேலைகள் நன்ருக நடைபெறுமென்பதைப்புரிந்து கொள்ளுங்கள். ''

அது முதல் தவளைகள் அரசன் என்ற பெயரைச் சொல்லுவதையே விட்டுவிட்டன.

—விநேபா

# மா - சே துங்கை அழையுங்கள்

கூறியவர் விநேபா !!

பீகார் மாநிலத்தின் தர்பங்கா மாவட்டம் தானமாகியபோது அதை நேரில் வந்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று விநேபாஜியிடம் ஊழியர் வேண்டுகோள்விடுத்தனர்.

''மாநில தான விழாவிற்கு சீனத் தலைவர் மா-சே-துங்கை அழையுங்கள் என்று விநேபாஜி கூறினர்.

இதைக்கேட்டு ஊழியர்கள் திடுக்கிட்டனர். மாவட்டதானவிழாவிற்கு மா-சே-துங்கை அழைப்பதாவது? யாராவது இதைப்பற்றிச் சிந்திப்பார்களா என்ன?

விநேபாஜி கூறினர்:

மாசேதுங்கை அழைக்க வேண்டுமென்று உண்மையாக நான் விரும்புகிறேன். ஏனெனில் இந்த நிலத்திற்காக சினுவில் பல லட்சக்கணக்கான நிலச்சுவான்தார்கள் கொன்றுகுவிக்கப்பட்டனர். ஆகையால் நிலப்பிரச்சனையைத் தீர்க்க இரத்தம் சிந்தவேண்டியதில்லை. அன்பின் மூலமே, மனமாற்றத்தின் மூலமே செய்ய இயலுமென்பதை மா-சே-துங்கு வந்து பார்த்துச் சொல்லட்டும்.

# வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [1972 ஜனவரி, பெப்ரவரி] வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 144 | 42 |
| சர்வோதயபாத்திரம் | 3 | 77 |
| சம்பத்துத்தானம் | 37 | 50 |
| அரிசி | 96 | 95 |
| விடுதிக்கட்டணம் | 80 | 00 |
| காந்தியம் | 7 | 00 |
| மொத்தம் | 369 | 64 |

| செலவு | | |
|---|---|---|
| உணவு | 91 | 32 |
| பிரயாணம் | 33 | 69 |
| சலூன் | 5 | 25 |
| கோகுலம் | 13 | 82 |
| வெளிச்சம் | 4 | 60 |
| மாணவர்செலவு | 63 | 67 |
| கமம் | 4 | 00 |
| தபால் | 7 | 80 |
| வயித்தியம் | 3 | 60 |
| அச்சகம் | 6 | 70 |
| விழா | 6 | 70 |
| கதர் | 7 | 00 |
| நாணுவிதம் | | 35 |
| கையிருப்பு | 121 | 14 |
| மொத்தம் | 369 | 64 |

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்திசேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில்அச்சிடப்பட்டது.